மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 42/2021

பெயர் : செல்வராஜ்
சாட்சி – வா.சா–1 நாள்: 04.07.2025

---

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பு)**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். எந்தெந்த சர்வே எண்களுக்காக நிரந்தர உறுத்துக் கட்டளை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் க.ச.610/1C மற்றும் க.ச.610/1D காலைகளுக்காகும்.நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் நான் சொன்ன தகவல்களின் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாவா சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை வா.சா.ஆ.5 கிரையப் பத்திரத்தின் மூலம் தான் கிரயம் வாங்கி உள்ளேன் என்றால் சரிதான்.

2. சொத்து சம்பந்தப்பட்ட மூல ஆவணங்களை பார்த்து தான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கிரயம் கொடுத்த திருஞானசம்பத், மோகனசுந்தரம் ஆகியோர்களின் தந்தை குமாரசாமி கவுண்டர் அவரது சகோதரர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட 23.04.1981 தேதியிட்ட வா.சா.ஆ. 1 பாகப்பிரிவினை பத்திரத்தின் படி சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ. 1 பாகப்பிரிவினையில் குமாரசாமி என்பவருக்கு ஏ அட்டவணை சொத்தாக க.ச.610/1 காலையில் 1.91 ¾ ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே பாகப்பிரிவினையில் நாச்சிமுத்து என்பவருக்கு க.ச.583 காலையில் 2.37 ½ ஏக்கர் பூமி பி அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 பாகப்பிரிவினையில் பிரதிவாதி முத்துசாமிக்கு சி அட்டவணை சொத்தாக க.ச.610/1 காலையில் 1.91 ¾ ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 1 பாகப்பிரிவினையில் சாமியப்பன் என்பவருக்கு டி அட்டவணை சொத்தாக க.ச.610/1 காலையில் 1.91 ¾ ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ. 1 பாகப்பிரிவினை பத்திரம் செய்து கொள்ளப்பட்ட சமயத்தில் க.ச.610/1 காலை உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி முத்துசாமி தனக்கு பாத்தியப்பட்ட பங்கில் இருந்து வா.சா.ஆ.2 08.07.1987 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் எங்களுக்கு கிரயம் கொடுத்த ஒரு குமாரசாமி கவுண்டர் என்பவருக்கு 95 சென்ட் பூமியை கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் நடுப்பகுதியில் தென்வடலாக கிரயம் செய்து கொடுப்பதாகத்தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. பிரதிவாதி முத்துசாமி தனக்கு வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் கிடைத்த 1.91 ¾ ஏக்கர் பூமியிலிருந்து தான் குமாரசாமி கவுண்டருக்கு 95 சென்ட் பூமியை கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான்.அதன் பின்னர்தான் மேற்படி பூமி ஆனது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. உட்பிரிவு செய்யப்பட்ட பின்னர் பிரதிவாதி முத்துசாமி, ஜோதிமணி என்பவருக்கு வா.சா.ஆ.3 07.09.2001 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் மூலமாக க.ச.610/1C காலையில் 75 சென்ட் பூமியை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

6. உட்பிரிவுகள் எப்போது செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். க.ச.610/1 காலையில் குமாரசாமி என்பவருக்கு வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின்படி ஒதுக்கப்பட்ட 1.91 ¾ ஏக்கர் பூமி மற்றும் பிரதிவாதியிடமிருந்து வா.சா.ஆ.2 08.07.1987 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்ற 95 சென்ட் பூமி சேர்த்து 2.86 ஏக்கர் பூமியை அவர் விருப்பத்திற்கு ஏற்றார் போல், க.ச.610/1சி காலை என உட்பிரிவு செய்து கொண்டுள்ளார் என்றால் சரியல்ல.

7. 11.02.2014 தேதியில் ஜோதிமணி மற்றும் முத்துலட்சுமி வகையறாக்கள் எதற்காக வா.சா.ஆ. 4 பரிவர்த்தனை பத்திரம் செய்து கொண்டார்கள் என்றால் சர்வே எண்கள் மாறி இருந்ததால் அதற்கு தகுந்தார் போல் மாற்றிக் கொள்வதற்காக செய்து கொண்டார்கள். பொதுவாக பரிவர்த்தனை பத்திரம் செய்து கொள்ளும்போது அவரவருக்கு என்ன அளவு பூமி பாத்தியப்பட்டதோ அதற்கு தகுந்தார் போல் அதே

அளவு அல்லது அதை மதிப்புடைய பூமியை பரிவர்த்தனை மூலம் மாற்றிக் கொள்வார்கள் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.4 பரிவர்த்தனை பத்திரத்தில், முத்துலட்சுமி வகையறா மற்றும் ஜோதிமணி ஆகியோர்களுக்கு க.ச.610/1 காலையில் அவரவருக்கு எவ்வளவு பூமி பாத்தியம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின்படி பிரதிவாதி முத்துசாமிக்கு ஒதுக்கப்பட்ட 1.91 ¾ ஏக்கர் பூமியில் அவருக்கு இன்னும் 21 ¾ சென்ட் பூமி உள்ளதை அவரிடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்பதற்காக வா.சா.ஆ.4 பரிவர்த்தனை பத்திரம் செய்து கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 பரிவர்த்தனை பத்திரம் க.ச.610/1 சி காலையில் பிரதிவாதிக்கு உள்ள உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

9. நான் சொத்தினை வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். க.ச.610/1 காலையில் பிரதிவாதி முத்துச்சாமி குமாரசாமிக்கு விற்ற 95 சென்ட் பூமியையும், ஜோதிமணிக்கு விற்ற 75 சென்ட் பூமியையும் தவிர வேறு சொத்துக்கள் விற்றதாக பதிவுகள் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின்படி பிரதிவாதி முத்துசாமிக்கு ஒதுக்கப்பட்ட 1.91 ¾ ஏக்கர் பூமியில் அவருக்கு இன்னும் 21 ¾ சென்ட் பூமி மீதம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. க.ச.610/1 காலையில் இன்னும் 21 ¾ சென்ட் பூமி மீதம் உள்ளது அந்த விவரம் எனக்கு நன்கு தெரிந்தும் நான் ஒப்புக்கொண்டால் எனது வழக்கிற்கு பாதகமாகும் என்பதால் நான் வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.07.04 18:06:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.